www.tamilarangam.net

# ஈழநாடு பத்திரிகை காரியாலயத்தை கொளுத்தியவர்களுக்கு;

அன்புடையீர்,
ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களின்
அறிவுப் பசியைத் தீர்க்க
ஐரோப்பாவில் முதல் வெளிவந்த "ஈழநாடு"
12. 01. 1994 புதன்கிழமை
உங்களால் கொளுத்தப்பட்ட செய்தி கேட்டு
நாங்கள் மனம் கலங்கவில்லை.

ஆனால்.
உங்கள் அறியாமையை நினைத்து
வேதனைப்படுகின்றோம்.
ஈழ தமிழ் மக்களின் அறிவுப் பசியைத் தீர்த்த
தென் ஆசியாவின் மிகப் பெரிய நூலகமான
யாழ் பொது நூலகத்தை எரித்த
சிங்களக் காடையர்கள் போல
ஐரோப்பாவில் வசிக்கும் தமிழ் மக்களின்
அறிவுப் பசியைத் தீர்த்து வந்த
"ஈழநாடு" பத்திரிகை காரியாலயத்தை
தமிழர்களாகிய நீங்கள் கொளுத்தியதையிட்டு
வெட்கப்படுகின்றோம்.

யாழ்ப்பாணம் ஈழநாடு, ஈழமுரசு
போன்ற பத்திரிகைகள் கொளுத்தப்பட்டதால்
அவைகள் அழிந்துவிட்டனவா?

இல்லை,
நீங்கள் வைத்த நெருப்பின் ஜுவாலையின் ஒளியில் நின்று
இன்னும் புதுமெருகுடன்
ஈழநாடு வெளிவரும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

அன்புடன்
வண்ணை தெய்வம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்